1975 நவம்பர் 5]

நாக நதியின் குறுக்கே அணை

*191 வின—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், அமிர்திக்காட்டிற்கு அருகில் நாகநதி ஆற்றுக்குக் குறுக்காக கீழ்அரசம்பட்டுக்கருகில் அணை கட்டுகின்ற திட்டம் பற்றிய ஆய்வுரைகள் அரசுக்கு கிடைத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) அரசுக்கு வரவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி: அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் அமிர்திக் காட்டிற்கு அருகில், நாகநதி ஆற்றுக்குக் குறுக்கே அணை கட்டினல் நல்ல பாசனவசதி கிடைக்கும் என்று சொல்கிறார்கள், அமிர்திக்காடு உல்லாசப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடமாகவும் இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்த அணையைக் கட்ட நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அரசுக்கு வரவில்லை என்று சொன்னேனே தவிர அது தலைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. அவரிடம் இருந்து தலைமைப் பொறி யாளருக்கு வந்தவுடன் தலைமைப் பொறியாளர் அதனைப் பரிசீலிப்பார்.

மாவட்டங்களைப் பிரித்தமைத்தல்

*192 வின—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடியை தனி மாவட்டமாகப் பிரிக்கும் உத்தேசம் அரசு பரிசீலனையிலுள்ளதா?